12.09. 2025.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )**

**விழுப்புரம்.**

**OS. 27/2018**

**பி. வா.சா.2**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | அப்துல் மாலீக் | | |
| **த/ பெ** | ஷேக் ஆதாம் | **மதம்** | |
| **கிராமம்** | விழுப்புரம் | **தொழில்** | விவசாயம் |
| **தாலுக்கா** | விழுப்புரம் | **வயது** | 58/ 2025 |
| **மாவட்டம்** | விழுப்புரம் | **தேதி** | 12.09.2025 |

சாட்சி அழைப்பாணை மூலம் வரவழைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார். சாட்சி உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

எனக்கு சாட்சி சொல்ல அழைப்பாணை வந்தது. நிலம் குத்தகைக்கு விட்டது சம்மந்தமாக சாட்சி சொல்ல எனக்கு அழைப்பாணை வந்தது. நான் ஐய்யப்பன் மற்றும் பாலு ஆகியோருக்கு குத்தகைக்கு விட்டது சம்மந்தமாக சாட்சி சொல்ல வந்துள்ளேன். அது போன்று நான் எனது நிலத்தை அவர்களுக்கு குத்தகைக்கு விட்டிருந்தேனா என்றால் 1999 முதல் 2010 வரை அவருக்கு குத்தகைக்கு விட்டிருந்தேன். மொத்தம் 5 ஏக்கர் குத்தகைக்கு விட்டிருந்தேன். குத்தகை சம்மந்தமாக அவர்களுக்கு ஆவணம் எதாவது எழுதிக்கொடுத்துள்ளேனா என்றால் எழுதிக்கொடுத்துள்ளேன். எந்த தேதியில் யார் பெயருக்கு எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் 17/07/1999 ந் தேதியில் பாலு மற்றும் ஐய்யப்பன் பெயருக்கு எழுதிக்கொடுதுள்ளேன். நான்

எழுதி கொடுத்த ஆவணம் என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமா என்றால்சரிதான். அந்த 5 ஏக்கர் நிலத்தில் எவ்வளவு வருமானம் வருகிறது என்றால் 1 போகத்திற்கு எனக்கு 100 மூட்டை நெல் கொடுப்பார். விளைச்சலுக்கு தகுந்தவாறு கொடுப்பார். 1 வருடத்திற்கு முப்போகமும் பயிர் செய்வார்.

**குறுக்கு விசாரணை கேட்டுக்கொண்தற்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**